# தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை மறைமலையடிகளாரின் 150ஆவது பிறந்த நாள்!

பல்லாவரம் பொதுநிலைக் கழகப் பேராசிரியர் தவத்திரு நாகை என்.எஸ். வேதாசலம் பிள்ளை என்னும் மறைமலையடிகள் பிறந்தநாள் (15.7.1876) இன்று. பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிய கால்நூற்றாண்டு இருக்கிறபோதே தோன்றியவர் மறைமலையடிகள். அதாவது அவருக்கு இன்று 150-ஆவது பிறந்த நாள். ஒன்றரை நூற்றாண்டு கடந்தும் அவரை நாம் ஏன் நினைவுகூர வேண்டும் என்றால் அவர் மொழித் தூய்மைக்கும் தமிழர் சமய மேம்பாட்டிற்கும் தமிழின எழுச்சிக்கும் மிகச் சிறப்பான வகையில் பணியாற்றியவர். இவரைப் பற்றி நாம் 1990-91ஆம் ஆண்டுகளில் **முரசொலியில்** எழுதியிருக்கின்றோம்.

பிரிட்டிஷார் இங்கு ஆட்சி செய்ததால் நாம் அடைந்த மிகப் பெரிய நன்மை என்பது, அவர்கள் **'நாம் யார்?'** என நமக்கு உணர்த்தியதுதான்! சமஸ்கிருதம் மாக்ஸ் முல்லரால் தூக்கி நிறுத்திய அதே காலகட்டத்தில் தென்னிந்திய மொழிகளின் ஆய்வுகளைப் பற்றிய செய்திகள் வெளிவந்தன.

**வடநாட்டு மொழிகள் சமஸ்கிருதத்திலிருந்து தோன்றியது போலத் தென்னிந்திய மொழிகள் தமிழிலிருந்து திரிந்து தோன்றின. திராவிட மரபியல் உருவாயிற்று. இது முதலில் அரசியல் நிலைப்பாடுகளைத் தோற்றுவிக்கவில்லை.**

**திராவிட மொழி, சமயம், பண்பாடு, நாகரிகம் ஆகியவைகளைப் பற்றிய சிந்தனைகளையே அறிஞர்களிடையே தோற்றுவித்தது. இதையொட்டி 'திராவிட அரசியல்' தோன்றிற்று. 19-ஆம் நூற்றாண்டு தொடக்கமே தமிழின எழுச்சிக்குரிய பூபாளத்தை இசைத்தது. 1802-இல் திருக்குறளும் நாலடியாரும் அச்சேறின.**

கால்டுவெல்லின் திராவிட ஒப்பிலக்கண ஆய்வுகள் மொழியியல் அறிஞர்களிடையே ஒரு கிளர்ச்சித் துடிப்பை ஏற்படுத்தியது. கால்டுவெல்லின் ஆய்வுகள் வெளிவந்த சில ஆண்டுகளுக்குள்ளாகவே கிழக்கின் புனித நூல்கள் (Sacred Books of the East) 1875 முதல் 51 தொகுதிகள் வெளிவந்தன. இவையெல்லாம் மாக்ஸ் முல்லர் (1823-1890) தொகுத்தவை. இதில் 48 தொகுதிகளை அவர் காலத்திலேயே வெளியிட்டார். அவர் மறைவுக்குப் பின் 3 தொகுதிகள் வெளிவந்தன.

அறிஞர் ஜே.எம்.நல்லசாமிப்பிள்ளை சித்தாந்த தீபிகை எனும் ஆங்கில ஏட்டை நடத்தினார். அதில் எழுதப்பட்ட தலையங்கத்தில் ஜி.எம்.கப்பன் (G.M.Cobban) எனும் கிறிஸ்தவ பாதிரியார் பழம்பெரும் திராவிட இலக்கியத்தைப் பற்றிய முக்கியத்து வத்தைக் குறிப்பிட்டு தம் நண்பர் ஒருவருக்கு கடிதம் எழுதினார். அந்த நண்பரிடம் திராவிட மொழிகளின் பழமையை மாக்ஸ் முல்லருக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார். அதன் விளைவாக ஆய்வு மாணவர்கள் திராவிட இலக்கியத்தையும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்படி மாக்ஸ் முல்லர் பரிந்துரைத்து இருக்கிறார்.

அதே போல ஜே.எம்.நல்லசாமிப் பிள்ளையின் சித்தாந்த தீபிகை The Light of Truth எனும் ஆங்கில ஏட்டையும் மாக்ஸ் முல்லருக்கு அனுப்பினார். அவ்விதழைப் பற்றிய குறிப்பை 'மதிப்புமிக்கது' என மாக்ஸ் முல்லர் தெரிவித்து இருக்கிறார். இப்படி மாக்ஸ் முல்லர் சமஸ்கிருதத்தைப் போலத் திராவிட மொழிகளையும் ஆராய்ந்து வெளியிட வேண்டும் என்கிற கருத்துடைய அறிஞர் ஜே.எம்.நல்லசாமிப் பிள்ளை தாம் நடத்தி வந்த சித்தாந்த தீபிகை இதழின் வழி ஒரு அறிவார்ந்த வட்டத்தை உருவாக்கினார் அல்லது இதழ் காரணமாக உருவாயிற்று என்றும் சொல்லலாம்.

அப்படி உருவான வட்டத்தின் பெயர்களில் முதற்பெயராக நாகை வேதாசலம் பிள்ளை எனும் பெயர் இடம் பெற்று இருக்கிறது. இவருக்குத்தான் இன்று 150ஆவது பிறந்த நாள். இனி, அவரைப் பற்றிப் பார்ப்போம்.

மறைமலையடிகளின் பெயர் தொடக்கக் காலங்களில் (1916க்கு முன்பு) நாகை எஸ்.வேதாசலம் பிள்ளை என்றும், சுவாமி வேதாசலம் என்றுமே அறிமுகமாகியிருந்தது. தமிழைத் தமது 15 ஆம் அகவையில் கற்கத் தொடங்கிய இவர் 21 அகவைக்குள் அனைத்தையும் கற்றுத் தேர்ந்தார். இவர் 15.7.1876 இல் பிறந்தார். நாகை புத்தகக் கடை நாராயணசாமிப் பிள்ளையிடம் தமிழையும், சூளை சோமசுந்தர நாயகரிடம் சைவ சித்தாந்தத்தையும் கற்றார். பேராசிரியர் மனோன் மணியம் சுந்தரம் பிள்ளையிடம் தொடர்பு கொண்டு, அவரது பரிந்துரையின் பேரில் திருவனந்தபுரத்தில் தமிழாசிரியத் தொழிலில் அமர்ந்தார். சில ஆண்டுகள் கழித்துச் சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் தமிழாசிரியராக வும் துறைத் தலைவராகவும் பணியாற்றினார். பின்னர், பல்லாவரத்தில் பொதுநிலைக் கழகம் கண்டு தமிழுக்கும், சைவத்திற்கும் தொண்டு செய்து வரலானார்.

**மறைமலையடிகள் நான்காம் படிவம் (9ஆம் வகுப்பு) மட்டுமே பள்ளியில் படித்தவர். அவர் தனியாகப் பாடங்கேட்டும், தாமாக முயன்று கற்றும், அவர் தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகியவற்றில் பெரும்புலமை பெற்றவராக விளங்கினார். அவர் தம் நூல்களுக்கு அவரே ஆங்கில முன்னுரை வரைந்தார். பா.வே. மாணிக்க நாயக்கர் போன்ற அறிஞர் பெருமக்களின் நூல்களுக்கும் இன்னும் சிலரின் நூல்களுக்கும் அருமையான ஆங்கில முன்னுரைகளை எழுதியிருக்கிறார். அந்நாளில் அவரது ஆங்கிலக் கட்டுரைகள், 'ஜஸ்டிஸ்', 'இந்து', 'மெட்ராஸ் மெயில்' போன்ற புகழ்பெற்ற நாளேடுகளில் வெளிவந்துள்ளன. இவர் திறனாய்வுக் கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதுகிற ஆற்றல் பெற்ற தமிழ் அறிஞராக விளங்கினார்.**

அதுபோலவே இவரது தமிழ்க்கட்டுரைகள் **'திராவிடன்', 'சுதேசமித்திரன்', 'குடிஅரசு'** போன்ற ஏடுகளிலும் வெளிவந்துள்ளன. வடமொழி மூலத்தினின்று சாகுந்தலம் நாடகத்தினை மொழி பெயர்த்து வெளியிட்டார். வேதங்களையும் உபநிடதங்களையும், ஸ்மிருதிகளையும் வடமொழி அறிந்ததால் கற்று, அதனை ஆய்வுக்குப் பயன்படுத்தினார். பின்னர், தமது கருத்துகளை அவரது நூல்களில் வடித்தார்.

1916-இல் நீதிக்கட்சி அரசியல் துறையில் பார்ப்பனர் ஆதிக்கத்தை வேரோடும், வேரடி மண்ணோடும் சாய்க்கத் தொடங்கியது. சமுதாயத்துறையில் சுயமரியாதை இயக்கம் 'அவர்களின்' மேலாண்மையை வீழ்த்தப் போராட்டத்தைத் தொடங்கியது. அதேபோல, மொழித் துறையில் அவர்களது ஆதிக்கத்தைசமஸ்கிருதத்தின் ஆதிக்கத்தை கலப்பைப் போக்கத் தனித்தமிழ் இயக்கத்தை அடிகளார் தொடங்கினார். மறைமலையடிகளுக்குத் தமிழின் இயற்கை அமைப்பும் அதன் இயல்பும் வளமும் மரபும் துணை நின்றன. **கால்டுவெல் பாதிரியாரின்** ஆய்வுகளும் வழிகாட்டின.

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சென்னை இராசதானியில் புதிய அணுகுமுறையோடு கூடிய ஓர் அரசியல் உருவாயிற்று. அச்சமயத்தில் சங்க இலக்கியங்களும் பதிப்பிக்கப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மொஹஞ்சதாரோ - ஹரப்பா அகழ்வாராய்ச்சிகள் வெளியிடப்பட்டுத் தொன்மையான 'திராவிட' நாகரிகத்தின் எழுச்சிமிக்க அந்நாள்கள் கண்டறியப்பட்டன. அய்ரோப்பிய மத குருமார்களின் ஆய்வுகள் தமிழுக்கு முக்கிய இடம் இருந்ததை நாம் தெரிந்து கொள்ள உதவின. இத்துறையில் கால்டுவெல் பாதிரியாரின் பணி ஒப்பற்றதாக விளங்கியது.

தமிழின் தொன்மை பயன்படுத்திக் கொள்ளப்பட்டு அவை சமஸ்கிருதத்திற்கு ஏற்றப்பட்டன என அவரது ஆய்வுகள் வெளிப்படுத்தின. வடமொழியின் துணையில்லாமல் தமிழ் 'தனித்து' இயங்க முடியும் என்பதைத் தமது **திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எனும் நூலில் கால்டுவெல் பாதிரியார் வெளியிட்டார்.** கால்டுவெல் பாதிரியாரின் ஆய்வுக்கு முன்பே தமிழ் அறிஞர்கள் இக்கூற்றை அறிந்திருந்தாலும், அவர்கள் வெளிப்படுத்த வாய்ப்பும் கருவியும் இன்றித் தவித்தனர். இப்படி வளர்ச்சியின் போக்கு செல்வதையும், மொழியின் இயற்கைச் செழிப்பையும் உணர்ந்த

**க.திருநாவுக்கரசு**

**திராவிட இயக்க ஆய்வாளர்**



மறைமலையடிகளார் தமது ஆய்வுகளை வெளியிடத் தொடங்கினார். இவை மக்களிடம் சென்று அடையாமல் படித்தவர்களிடையே மட்டும், கொண்டும் கொள்ளாமலும் உலா வந்தன. இவரது ஆய்வின் முடிவுகளைச் சைவர்களே கூட எதிர்த்தனர்.

**திரு.வி.க. இவரது ஆய்வை ஏற்றுக்கொள்ளவில்லை. இதனை தமது வாழ்க்கைக் குறிப்பில் அவர் குறித்திருக்கிறார்.** எனினும், மறைமலையடிகளால் தமிழகத்தில் ஏற்பட்ட மாறுதல்களைக் குறிக்கும்போது அவர் பின்வருமாறு எழுதுகிறார்.

**"தென்னாடு பன்னெடுங்காலம் தன்னை மறந்து உறங்கியது. அவ்வுறக்கம் போக்கிய பெருமை மறைமலையடிகளுக்கு உண்டு. அவர்தம் தமிழ்ப்புலமையும், வடமொழிப்புலமையும், ஆங்கிலப் புலமையும், ஆராய்ச்சியும், பேச்சும், எழுத்தும், தொண்டும், தென்னாட்டை விழிக்கச் செய்தன. தென்னாடு அடிகளால் விழிப்புற்றது என்று மண்ணும் முழங்கும்; மரமும் முழங்கும்.**


**அடிகள் பேச்சு, பல பேச்சாளரைப் படைத்தது. எழுத்து பல எழுத்தாளரை ஈன்றது. நூல், பல நூலாசிரியன்மாரை அளித்தது. அடிகளே தென்னாடு, தென்னாடே அடிகள் என்று கூறுவது மிகையாகாது."**

திரு.வி.க.வின் இக்கூற்று, எத்தகைய பரிமாணத்தை அடிகள் உருவாக்கியிருக்கிறார் என்பதை உணர்த்தும்.

மறைமலையடிகளின் ஆய்வில் தன்னுரிமையும், தன்மானமும் தழைத்தோங்கின. நீதிக்கட்சி கால்கோள் கொண்ட ஆண்டில்தான் (1916) தம் மகள் **நீலாம்பிகை அம்மையாரால்** உணர்த்தப்பட்டுத் தனித்தமிழில் பேசவும் எழுதவுமான இயக்கத்தை மறைமலையடிகள் தொடங்கினார். இவர் நடத்தி வந்த **'ஞான சாகரம்''அறிவுக்கடலாக'**மாறிற்று. மறைமலையடிகள் சிறு தெய்வ வணக்கங்களை ஏற்றுக் கொள்ளாதவர். **முழுமுதற்கடவுளைப் போற்றுபவர்.**

இவரிடம் தனிப்பாடங்கேட்டுப் பெரும்புலவர் ஆனவர்கள் பலர் உண்டு. இவரிடம் பாடம் கேட்டு இவருக்கு எதிரான ஆய்வுகளை வெளியிட்டவர்களும் உண்டு. மறைமலையடிகளாரின் படைப்புகளில் **சாதி வேற்றுமையும் போலிச் சைவரும், வேளாளர் நாகரிகம், பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை, திருக்குறள் ஆராய்ச்சி, கட்டுரைக் கோவை, கட்டுரைக் கொத்து, சிந்தனைக்கட்டுரைகள், கோகிலாம்பாள் கடிதங்கள், தமிழர் மதம்** ஆகியவை சிந்தனைக்கு விருந்து படைப்பவையாகத் திகழுகின்றன.

மறைமலையடிகளின் ஆய்வு என்பது, மிக ஆழமான வரலாற்று வேர்களை உடையது. **கால்டுவெல் பாதிரியார் தமது ஒப்பிலக்கணத்தில் தமிழுக்கும் சமஸ்கிருதத்திற்கும் இரண்டாயிரம் ஆண்டுகள் இடையறாத போர் நடந்து வந்துள்ளது என்று குறிப்பிடுகிறார்.** இந்த இடையறாத போரின் இறுதி வடிவம் தான் மறைமலையடிகள்! அந்த வடிவத்தின் தொடர்ச்சியாகத் திராவிடர் இயக்கம் திகழுகிறது. அவரது சில



(1876-2026)

ஆய்வுகளைப் படித்தால் அந்த உண்மை நமக்கு விளங்கக்கூடும்.

மறைமலையடிகளார் தமது ஆய்வில் ஒழுக்கத்தைக் கவனிக்க முடியாததும், வேடத்தை மட்டும் கொண்டதும், அறிவுக்குப் பொருந்தாததுமான மதம் எதுவானாலும், அந்த மதத்தின் மீது நமக்கு ஏற்படும் வெறுப்புணர்ச்சி போலவே அவருக்கும் ஏற்பட்டு அதனைச் 'சாதி வேற்றுமையும் போலிச் சைவமும்' என்ற நூலில் வெளிப்படுத்தி இருக்கிறார். இவரது 'வேளாளர் நாகரிகம்' எனும் நூலில் ஆய்வுபூர்வமாகப் பல கருத்துகளை வெளியிட்டுள்ளார்.

அந்நூலில் அவர் அன்பும், அருளும் உடையாரே உயர்ந்த சாதியார் என்றும், தமிழர்கள் உபநிடதம், சாங்கியம் போன்ற நூல்களை வகுத்தனர் என்றும் ஓம் எனும் பிரணவம் தமிழுக்கே உரிமை உடையதென்றும் தமிழர்கள் உபநிடதங்கள் இயற்றியமைக்குச் சான்று காட்டியும், பழைய வேதங்கள் என்பன தமிழ்மறைகளே என்றும் வெளிப்படுத்தினார். இவரது இக் கருத்துகள் புரட்சிகவிஞர் பாரதிதாசன் இயற்றிய பின்வரும் பாடலில் எதிரொலிப்பதைக் காணலாம்.

**குமரிநாட்டின் தமிழ்நான் மறைகள்**
**அமிழ்ந்தன! வடவர் மறைகள் நிமிர்ந்தன!**
**அமிழ்துநேர் தத்துவம் ஆன எண்ணூல்**
**அமிழ்ந்தது! வடவரின் அறிவுக் கொவ்வாப்**
**பொய்ம்மை மெய்ம்மை ஆகிப் பொலிந்தன.**
**அகத்தியன் தொல்காப்பியன் முதலானோர்**
**தகுதிறம் தமிழிற் பெறுதிறம் அருளிய**
**எண்ணருங் கண்ணிகர் தமிழ்பாடும் ஏடுகள்**
**மறைந்தன! வடவர் தீயொழுக்க நூல்கள்**
**நிறைந்தன! இந்த நெடும்புகழ் நாட்டில்**
**"தீது செய் யற்க செய்யில் வருந்தி**
**ஏதும் இனியும் செய்யற்க" வெனும்**
**விழுமிய தமிழர் மேன்மை நெஞ்செலாம்**
**கழுவாய் எனுமொரு வழுவே நிறைந்தது!**
**'நல்குதல் வேள்வி' என்பது நலியக்**
**கொல்வது வேள்வி எனும் நிலை குவிந்ததே!**
**ஒருவனுக்கொருத்தி எனும் 'அகம்' ஒழிய**
**ஐவருக்கொருத்தி எனும் அயல் நாட்டுக்**
**குச்சுக் காரிக்குக் கோயிலும் கட்டி**
**மெச்சிக் கும்பிடும் நிலையும் மேவிற்று!**
**மக்கள் நிகர்எனும் மாத்தமிழ் நாட்டில்**
**மக்களில் வேற்றுமை வாய்க்கவும் ஆனதே.**
**உயர்ந்தவன் நான் என் றுரைத்தான் பார்ப்பான்**
**அயர்ந்தவன் நான் என் றுரைத்தான் தமிழன்.**
**இப்படி ஒரு நிலை காணுகின் றோமே**
**சிறந்த வாழ்வு கொள் செந்தமிழ் நாடிவ்**
**விழிநிலை நோக்கி இறங்குந் தோறும்**
**பழிநீக் கிடஎவன் பிறந்தான் இதுவரை?**
**இதுவரை எந்தத் தமிழன் இதற்கெலாம்**
**பரிந்து போராடினான் எண்ணிப் பார்ப்பீர்**
**தமிழன் மானம் தவிடுபொடி ஆகையில்**
**வாழாது வாழ்ந்தவன் வடுச்சுமந்து சாகையில்**
**ஆ! என்று துள்ளி மார்பு தட்டிச்**
**சாவொன்று வாழ்வொன்று பார்ப்பேன் என்று**
**பார்ப்பனக் கோட்டையை நோக்கிப் பாயும் இவ்**
**வருஞ்செயல் செய்வார் அல்லால்**
**பெரியார் எவர்? நம் பெரியார் வாழ்கவே!**

மறைமலையடிகள் 'கோகிலம்பாள் கடிதங்கள்' எனும் புதினத்தை 12.05.1911-இல் எழுதத் தொடங்கினார். இதில் பார்ப்பன கைம்பெண் பார்ப்பனரல்லாத சூத்திரனைக் காதலிப்பதாக அமைந்திருக்கும். இக்கதையில் வருகிற கோகிலாம்பாளை **பன்மொழிப்புலவர் கா.அப்பாத்துரையார்** சென்னைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கல்கி நினைவுச் சொற்பொழிவில் **"பார்ப்பன ஈவெரா"** என்று குறிப்பிட்டார். நீதிக்கட்சியும், சுயமரியாதை இயக்கமும் தோற்றமளிப்பதற்கு முன்பே, இக் கருத்தைக் கொண்டவர் மறைமலையடிகளார் என்பதை நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

இந்நூலின் இரண்டாம் பதிப்பின் முகவுரையில், **"ஒரு குரங்கு கடலைத் தாண்டிற்றென்றாலும் அஃது ஒரு மலையைப் பெயர்த்தெடுத்துக் கொணர்ந்ததென்றாலும், ஒருவன் பத்துத் தலைகளும், இருபது கைகளும் உடையனாயிருந்தானென்றலும், ஒருத்தியை வேறொருவன் சிறையாக எடுத்துச் சென்றக்கால் அவளிருந்த நிலத்தைப் பெயர்த்தெடுத்துச் சென்றானென்றாலும், ஒருவன் தன் கையிலிருந்த வட்டத்தைச் சுழற்றியெறிந்து பகலவனை மறைத்தான் என்றாலும், இன்னும் இவைபோல்வன பிறவுமெல்லாம் உலக இயற்கைக்கு முழு மாறான கட்டுக் கதைகளைக் கூறும் நூல்களைப் பகுத்தறிவுடையார் கற்பாராயின், அவர்க்கு அவை இன்பம் பயவாவாய். வெறுப்பினையே விளைவிக்கும்"** என எழுதியுள்ளார்.

இவரது கருத்துக்கள் உடன்பாடானவையே ஆகும். 'கோகிலாம்பாள் கடிதங்கள்' புதினத்தில், பார்ப்பனப் பெண் சூத்திரப் பையனைக் காதலிப்பதாக இவர் படைத்தற்குப் பிறகு, டாக்டர் டி.எம்.நாயர் ஆற்றிய ஸ்பர்டாங் பேருரையில் உள்ள கருத்தைப் பாருங்கள்.

"...நீங்களெல்லாம் வெகுவாகப் புகழும் திருவள்ளுவர், அவ்வை, கபிலர் ஆகியோரின் வம்சாவளி என்னவென்று எழுதி வைத்திருக்கிறான் தெரியுமா?

பார்ப்பானொருவனுக்குப் புலைச்சி வயிற்றில் பிறந்தவர் வள்ளுவரென்று! வியாசர் யார்? பார்ப்பனப் பராசரனுக்கும் சத்தியவதி என்னும் மீனவளுக்கும் கள்ளக்காதல் மூலம் பிறந்ததாக மகாபாரதத்தின் ஆதிபர்வம் கூறுகிறது."

இப்படியே பலப்பல கதைகள், பார்ப்பானுக்கும், சூத்திரச்சிக்கும் பிறந்தவன்களெல்லாம் காலாகாலத்தில் பெரிய மனுஷன்களாக யிருப்பதாகக் கதையைக் கட்டுகிறானே ஒழிய, **"ஒரு சூத்திரனுக்கும், ஒரு பாப்பாத்திக்கும் பிறந்த ஒரு பெரிய மனுஷன் கதை மருந்துக்காவது உண்டா இந்து புராணங்களில்!"** என்ற டி.எம். நாயர் கேட்பதற்கு முன்பே இக் கருத்தை மறைமலையடிகள் கதையில் எழுதிக் காட்டினார். அதுவே அந்நாள்களில் மிகப் பெரிய செய்தியாக இருந்தது. இது மட்டுமா?

இக்கட்டுரையைப் படிக்கின்ற நண்பர்கள், 'முரசொலி' ஏட்டின் முகப்பில் நாளும் திருவள்ளுவர் ஆண்டு அச்சிடப்படுவதைப் பார்த்திருப்பீர்கள்.

அத்திருவள்ளுவர் ஆண்டு உருவாகக் காரணமானவர்களுள் மறைமலையடிகள் ஒருவர். 1921-ஆம் ஆண்டு சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில், மறைமலையடிகளார் தலைமையில் தமிழ்ப் பேரறிஞர்களும், வரலாற்றுப் பேராசிரியர்களும் கூடித் திருவள்ளுவர் ஆண்டை முடிவு செய்தனர். அது முதற்கொண்டு திருவள்ளுவர் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

திருவள்ளுவர் ஆண்டு முடிவு செய்யப்பட்ட ஆவணத்தில் மறைமலையடிகளார், திரு.வி.க., கா.சு. பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் போன்ற பெருமக்கள் கையெழுத்திட்டனர்.

இத்திருவள்ளுவர் ஆண்டைத் தமிழ்நாடு (தி.மு. கழகம்) அரசு 1971-ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்த முன்வந்தது. அது முதற்கொண்டு அரசு நாள் குறிப்புகளும், நாள்காட்டிகளும், அரசிதழும் திருவள்ளுவர் ஆண்டைத் தாங்கி வரலாயின. இந்நிலைகளுக்குப் பிறகும், திருவள்ளுவர் ஆண்டினை ஏற்றுக்கொள்ளாத அறிஞர்(?) பெருமக்கள் தமிழகத்தில் இருக்கவே செய்கின்றனர். சில மாதங்களுக்கு முன்பு, மயிலை சீனிவாச சாஸ்திரி ஹாலில் நடைபெற்ற வையாபுரிப் பிள்ளையின் தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்ட தினமணி ஆசிரியர் அய்ராவதம் மகாதேவன் பேசியதை நாமும் செவிமடுத்தோம்.

"தினமணி ஏட்டில் நிறைய மாறுதல்களைச் செய்கிறீர்கள். போற்றக் கூடியதாய் இருக்கிறது. திருவள்ளுவர் ஆண்டையும் போட்டால் சிறப்பாக இருக்கும்" என்பதாகக் கடிதங்கள் வருவதாகவும்

திருவள்ளுவர் ஆண்டில் அவருக்கு உடன்பாடு இல்லாததால் அதனைச் செயல்படுத்தவில்லை என்றும் அக் கூட்டத்தில் அவர் பேசினார்.

ஆனால், இதே ஐராவதம் மகாதேவன் பல ஆண்டுகளுக்குப் பிறகு திருவள்ளுவர் ஆண்டை ஏற்றுக் கொண்டார். அப்போது அவர் தினமணியின் ஆசிரியராக இருக்கவில்லை. சிறந்த கல்வெட்டு ஆராய்ச்சியாளராக அவர் உயர்ந்து இருந்தார். சிந்து சமவெளி எழுத்துகளைப் படிக்கும் ஆய்வில் ஈடுபட்டு இருந்தார். சிலவற்றைப் படித்து அச்சொற்களையும் இக்கால எழுத்துகளில் வெளியிட்டார். அது குறித்து பெரு நூலை எழுதி ஆவணப்படுத்தியதோடு, சிந்து சமவெளி ஆராய்ச்சியில் விரல்விட்டு எண்ணத் தகுந்தவர்களில் ஒருவராக அவர் உயர்ந்தார் என்பது அவரைப் பற்றிய சிறப்புக்குரிய புள்ளியாகும்.

மறைமலையடிகளின் பால் நாம் பற்றுக் கொள்வதற்கு இன்னொரு முக்கியமான காரணம், 1938-இல் அவர் இந்தியை எதிர்ப்பதற்கு வெளிப்படையாக ஆதரவு தந்து அவ்வியக்கத்தில் பங்கு கொண்டது ஆகும். அது மட்டும் அல்லாமல் 'Why Hindi Should not be made the Common Language of India'எனும் ஆய்வுக் கட்டுரையையும் எழுதி வெளியிட்டார்.

அக்கட்டுரையில் இந்தி மொழியின் தோற்றம், அம்மொழியின் ஆதி இலக்கியம், அதன் வளம், அம்மொழியின் இயலாநிலை ஆகியவற்றைக் குறித்து அவர் விளக்கமாக எழுதினார். அவருடைய ஆய்வு பெரியதொரு வரவேற்பைப் பெற்றது. முதல் இந்தி எதிர்ப்புப் போருக்கு மிகுந்த எழுச்சியை ஊட்டியது.

தொடர்ச்சி நாளை